**செய்தி வெளியீடு எண்: 278** **நாள்: 21.04.2018**

## செய்தி வெளியீடு

இவ்வாண்டு 29வது சாலை பாதுகாப்பு வார விழா 23.04.2018 முதல் 30.04.2018 வரை மத்திய அரசின் கீழ்க்கண்ட கருப்பொருளை மையப்படுத்தி தமிழகத்தில் கடைபிடிக்க உள்ளது.

**சாலை பாதுகாப்பு – உயிரின் பாதுகாப்பு**

2017ஆம் ஆண்டு மட்டும் நமது மாநிலத்தில் 65,562 விபத்துகள் ஏற்பட்டு அதனால் 16,157 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இதில் இரு சக்கரவாகன ஓட்டிகள் அதிக அளவில் உயிரிழந்துள்ளனர். இதனைத் தவிர்க்க நமது அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களிடையே சாலையை பாதுகாப்பாக உபயோகிப்பது பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி விபத்தினை தடுப்பதில் பெரும் முயற்சியினை மேற்கொண்டு வருகிறது. அதன் ஓர் அங்கமாக மேற்கூறியவாறு 29வது சாலை பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படுகிறது.

சாலை பாதுகாப்பு வாரத்தின் ஏழு நாட்களும் ஒவ்வொரு பொருளை மையப்படுத்தி கடைப்பிடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை பாதுகாப்பு வாரத்தில் முதல் நாள் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களால் சென்னை தீவுத்திடலில் பேரணியை துவக்க உள்ளார். பிற மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் கீழ்க்கண்டவாறு சாலைப் பாதுகாப்பு வார நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

**<u>முதல் நாள் 23.04.2018 (திங்கள் கிழமை)</u>**

**சாலைப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பேரணி**

**(சென்னை மாநகரில் தீவுத்திடலில் இருந்து - காந்தி சிலை வரை, இதர மாவட்ட தலைநகரங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் தலைமையில்)**

**பங்கேற்பாளர்கள்**:- ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள், வாகன விற்பனையாளர்கள், IRT ஓட்டுநர்கள், மாநகரப் போக்குவரத்து பேருந்து ஓட்டுநர்கள், NSS, ஊர்க்காவல் படையினர் மற்றும் காவல் துறை ஓட்டுநர்கள், வாகன உற்பத்தியாளர்கள், அரசு சாரா அமைப்பினர்.

**<u>இரண்டாம் நாள் 24.04.2018 (செவ்வாய் கிழமை)</u>**

அனைத்து இரு சக்கர வாகன முகவர்கள், நான்கு சக்கர ஓட்டுநர்கள் கலந்து கொள்ளும் தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிவதன் முக்கியத்துவம் குறித்த பேரணியை அவரவர் அலுவலகங்களில் நடத்திக் கொள்ளுதல்.

**<u>மூன்றாம் நாள் 25.04.2018 (புதன் கிழமை)</u>**

உச்சநீதி மன்ற சாலை பாதுகாப்பு குழு அறிவுறுத்தலின் பேரில் கீழ்க்கண்ட 6 போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பாக பொறியியல் கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவ கல்லூரி மாணவர்களிடையே சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

1. அதிக வேகம்
2. அதிக பாரம் ஏற்றுதல்
3. சரக்கு வாகனங்களில் ஆட்களை ஏற்றிச் செல்லுதல்
4. குடி போதையில் வாகனம் இயக்குதல்
5. சிவப்பு விளக்கை தாண்டுதல்
6. வாகனம் இயக்கும்போது செல்போன் பேசுதல்

**<u>நான்காம் நாள் 26.04.2018 (வியாழக் கிழமை)</u>**

பள்ளி மற்றும் கல்லூரி பேருந்து ஓட்டுநர்கள், அரசு போக்குவரத்துக் கழக பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் கனினி மென்பொருள் தனியார் நிறுவன ஓட்டுநர்களுக்கு இலவச மருத்துவ முகாம் அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களின் மேற்பார்வையில் சுகாதாரத் துறை, 108 ஆம்புலன்ஸ் பணியமைப்பு மற்றும் தமிழ்நாடு அவசர விபத்து முன் முயற்சிகள் துறை ஆகியவர்களுடன் கலந்தாலோசித்து நடத்துதல்.

**<u>ஐந்தாம் நாள் 27.04.2018 (வெள்ளிக் கிழமை)</u>**

மாவட்டத்தில் உள்ள சம்பந்தப்பட்ட சுங்கச்சாவடி மையங்களில் சாலைப் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சாலை பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல் மற்றும் வாகனத்தின் பின்புறங்களில் சிகப்பு நிற பிரதிபலிப்பான்கள் ஒட்டுதல் மற்றும் சாலை பாதுகாப்பு சம்பந்தமாக தடம் மாறுதல், அதிக பாரம் ஏற்றுதல், வாகனத்தினை முந்தி செல்லுதல் சம்பந்தமாக அறிவுரை வழங்கி சோதனை மேற்கொள்ளுதல்.

**<u>ஆறாம் நாள் 28.04.2018 (சனிக் கிழமை)</u>**

அனைத்து முக்கிய சந்திப்புகள், வாரசந்தைகள், பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் ஊர்க்காவல் படை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் சாலை பாதுகாப்பின் முக்கியத்துவத்தை சாலை பயன்படுத்துவோர் மற்றும் ஓலா, ஊபர் போன்ற கால் டாக்ஸி ஓட்டுநர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

**<u>ஏழாம் நாள் 29.04.2018 (ஞாயிற்றுக் கிழமை)</u>**

சாலைப் பாதுகாப்பு குறித்த செயலாக்கப் பணிகள் மேற்கொள்ளுதல். அதிவேகம், அதிகபாரம், தலைக்கவசம் அணியாமல் பயணித்தல், சீட்பெல்ட் அணியாமல் பயணித்தல், வாகனத்தை ஓட்டும்போது கைபேசியைப் பயன்படுத்துதல் போன்ற விதிமீறல்கள் குறித்த சிறப்பு வாகன சோதனை மேற்கொள்ளுதல்

சாலை பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய உறுதிமொழியினை அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள், சோதனை சாவடிகள் மற்றும் அனைத்து அரசு போக்குவரத்து கழக அலுவலகங்கள் மற்றும் பணிமனைகள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் எடுத்தல்

சாலைப் பாதுகாப்பு ஆணையர் மற்றும்
போக்குவரத்து ஆணையர்,

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**